# உடன்பிறப்பே... 72

**நீரை.மகேந்திரன்**

தி.மு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த து.ப.அழகமுத்து அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.

# து.ப.அழகமுத்து

## “இயக்கத்துக்கு உழைத்த ஆலமரம்!”

ஓவியம் : ரவி பேலட்



**2010**-ஆம் ஆண்டு, திருச்சியில் கலைஞர் அறிவாலயத்தின் எதிரே அன்பிலார் சிலையைத் திறந்து வைத்தார், அப்போது முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர். அந்த நிகழ்வுக்குத் தொண்டர்களை வரவேற்று, ‘முரசொலி’யில் கடிதம் எழுதினார்.

அதில், “அன்பிலுக்கு சிலை திறக்கும் நிகழ்ச்சிக்கு உன்னை அழைக்க அண்ணாவும் இல்லை, அந்த அன்பிலும் இல்லை. நான்தான் இருக்கிறேன் உனை அழைக்க. என் வாயார, மனமார உன்னையெல்லாம் திருச்சிக்கு அழைக்கிறேன்” என அழைத்ததுடன், திருச்சியில் எனக்கு நெருங்கிய நண்பர்கள் என்ற வரிசையில் அன்பில் தர்மலிங்கத்தில் தொடங்கி, பொன்மலை பராங்குசம், து.ப.அழகமுத்து, திராவிடப் பண்ணை முத்துக்கிருஷ்ணன் என நினைவைத் திரும்பிப் பார்த்திருப்பார். அவருக்கு நெருக்கமான நண்பர்கள் எனில், அவர்கள் கழகத்தின் தளகர்த்தர்கள் என்பதைச் சொல்லத் தேவையில்லை. அப்படி, திருச்சியில் கழகம் வளர்த்த தளகர்த்தர்களில் ஒருவர்தான் து.ப.அழகமுத்து.

பழம்பெரும் சுயமரியாதை இயக்கச் செயல்வீரர். திருச்சி மாவட்டத்தில் கழகத்தைக் கட்டி வளர்த்த ஆரம்ப காலத் தலைவர்களில் ஒருவர். திருச்சி மாவட்டம், துறையூரில் சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த அழகமுத்து, சுயமரியாதை இயக்கத்தில் தன்னை இணைத்துக்கொண்டு தீவிர அரசியலில் ஈடுபட்டவர், திராவிடர் கழக உறுப்பினராக, பெரியாருடன் பயணித்தார். அண்ணாவின் அரசியல் சிந்தனைகளால் உந்தப்பட்டு, தி.மு.கழகம் தோற்றுவிக்கப்பட்ட நாள் முதல் அதன் உறுப்பினராகத் தன்னை இணைத்துக் கொண்டார்.

### களப்பணியே கழகப்பணி

1921-ஆம் ஆண்டு பிறந்த அழகமுத்து, திருச்சி மாவட்டம் துறையூரில் உள்ள ஜமீன்தார் உயர் தொடக்கப் பள்ளியில் கல்வி கற்றவர். 1937-ஆம் ஆண்டுவாக்கில் பற்றிப் படர்ந்த முதல் இந்தி எதிப்புப் போராட்டமே, அவர் அரசியல் பாடம் கற்றுக் கொள்ளத் தொடங்கிய காலமாக இருந்தது. அப்போது முதல், திருச்சியில் தீவிர களப்பணித் தொண்டராக அறியப்பட்டவர்.

கழகத்துக்கு மிகப்பெரிய திருப்புமுனைகள் தந்த நகரம் திருச்சி, என்பது கழக வரலாற்றில் எழுதப்பட்ட ஒன்று. அங்கு கழக வளர்ச்சி எளிதாக நிகழ்ந்துவிடவில்லை. 1950-இல் ‘இந்தி எதிர்ப்பு அறப்போர்’, 1951-இல் ‘திருச்சி உழவர் மாநாடு’, 1952-இல் ‘மாவட்டக் கழக மாநாடு’ என தொடர்ச்சியாக களத்தில் செயல்பட்டவர்கள் கழக முன்னோடிகள். இப்படியாக து.ப.அழகமுத்துவின் உழைப்பு, அண்ணாவிடம் பெரு நம்பிக்கையைக் தந்தது.

1954-ஆம் ஆண்டு வாக்கில், நெசவாளிகள் துயர் துடைக்க, திருச்சி வீதிகளில் கைத்தறி ஆடைகளைச் சுமந்து சென்று விற்பனை செய்தார் அண்ணா. அந்த நிகழ்வுக்கு அவர் வருவதற்கு முன், திருச்சி கழகத்தினரோடு இணைந்து வீதிக்கு வீதி கழகக் கொடி ஏற்றும் நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார் கலைஞர். அப்போது, அவருடன் நின்றவர்கள்தான் அவரது நினைவில் நின்ற நண்பர்கள்.

1956-இல் கழகத்தின் **‘இரண்டாவது மாநாடு’, ‘நங்கவரம் போராட்டம்’, ‘குளித்தலை தேர்தல் பிரச்சாரம்’** என து.ப.அழகமுத்துவின் பணிகள், பங்களிப்புகளை ‘நம்நாடு’ இதழ் குறிப்புகளில் காணமுடிகிறது.

1967-இல் கழகம் ஆட்சி அமைத்தபோது, அவர் இரண்டாவது முறையாக சட்டமன்ற உறுப்பினராக வந்தவர். கழகம் ஆட்சிக்கு வந்துவிட்டது என ஓயவில்லை, உப்பிலியாபுரம் அருகில் உள்ள மங்கப்பட்டி என்கிற கிராமத்தில் கொடியேற்றிய குறிப்பினை ‘நம்நாடு’ வெளியிட்டுள்ளது.

> **‘திருச்சி, துறையூர் பகுதிகளில் கழகம் வளர்க்க அரும்பாடுபட்ட நண்பர், திராவிட இயக்கத்தின் வளர்ச்சிக்காக உழைத்த ஆலமரங்களில் ஒருவர்’ என தனது இரங்கல் கடிதத்தில், திருச்சி நினைவுகளை திரும்பிப் பார்த்தார்!**

### சட்டமன்ற உறுப்பினர்

1962-ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் பெரம்பலூர் தொகுதிக்கு அழகமுத்துவை வேட்பாளராக நிறுத்தினார் பேரறிஞர் அண்ணா. காங்கிரஸ் செல்வாக்கு செலுத்திய தொகுதியில் 55 சதவிகித வாக்குகளுடன் வெற்றி பெற்றார் அழகமுத்து. அப்போது சட்டமன்றத்தில் கழகம் எதிர்க்கட்சி மதிப்பினைப் பெற்றபோது, தி.மு.கழக சட்டமன்றக் கட்சிக் கொறடாவாக அழகமுத்துவை நியமித்தார் அண்ணா.

1958-ஆம் ஆண்டு கருப்புக் கொடி ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு சிறை சென்ற அழகமுத்து, கழகத்தில் அனைத்து முன்னோடிகளையும் போலவே, சட்டமன்ற உறுப்பினராக 1964-ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டு மூன்று மாத சிறைக் கொடுமையை அனுபவித்தார்.

1967-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் உப்பிலியாபுரம் தொகுதியில் களம் கண்ட அழகமுத்து, 56 சதவிகித வாக்குகளுடன் வெற்றிபெற்று வந்தார். கழகம் ஆளுங்கட்சியாக இருந்த அவையிலும், அவருக்கு, கழகக் கொறடா பொறுப்பு வழங்கினார் அண்ணா.

அண்ணா அடியொற்றியே, அழகமுத்துவின் அரசியல் பணிகளை அறிந்த கலைஞர், 1971-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் வாய்ப்பு வழங்கிட, உப்பிலியாபுரம் தொகுதியில் இருந்து சட்டமன்றம் வந்தார்.

கிளைக் கழகம், முழுநேர கட்சித் தொண்டர், பொதுக்குழு உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர், கட்சிக் கொறடா என படிப்படியாக பொறுப்புகளைக் கண்டவர் அழகமுத்து. சில ஆண்டுகள் கூட்டுறவுச் சங்கப் பொறுப்புகளிலும் பணியாற்றி இருக்கிறார்.

### கழகப் பிடிப்பும், உழைப்பும்

கழகக் கொறடாவாக இருந்த காலங்களில், அரசு முறைப் பயணங்களாக மலேசியா, பாங்காக், ஹாங்காங், ஜப்பான். சிங்கப்பூர், இலங்கை ஆகிய நாடுகளுக்கும் சென்று வந்துள்ளார். 1971-ஆம் ஆண்டில், ரோம், பாரீஸ், கெய்ரோ, ஏதென்ஸ். இலண்டன். அயர்லாந்து, ஜெர்சி, ஆம்ஸ்டர்டாம். ஜெனீவா ஆகிய நகரங்களுக்கும் சென்று வந்து, அவரது அனுபவங்களை அறிக்கைகளாக அரசுக்கு அளித்துள்ளார்.

மூன்று தடவை சட்டமன்ற உறுப்பினராக வெற்றி பெற்றதற்குக் காரணம் கட்சிப் பிடிப்பும், தொண்டர்களிடம் கொண்டிருந்த நல்லுறவுமே எனக் குறிப்பிடுகின்றனர் அவருடன் அரசியல் பழகியவர்கள். குறிப்பாக, இவர் வெற்றி பெற்ற தொகுதிகளில், இவருடைய சமுதாய வாக்குகள் என்பது வெற்றியைத் தீர்மானிக்கத் தக்கவை அல்ல. ஆனால், ஒவ்வொரு தேர்தலிலும் 50 சதவிகித வாக்குகளுக்கு மேல் பெற்று, வெற்றி பெற்றவர் என்பதற்குக் காரணம், அவர் அனைத்து சமூக மக்களிடமும் நன்மதிப்பைப் பெற்றிருந்தார். சமத்துவ, சமூகநீதிக் கொள்கைகளில் பிடிப்பு கொண்ட தலைவர் என்கிற அடையாளம் அவர் மீது இருந்ததைக் குறிப்பிடுகின்றனர்.

திருச்சியில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுகிறார் கலைஞர், “அன்பில் தர்மலிங்கம் கருப்பு என்றால், ‘இல்லை சிவப்பு’ என்று கூறுபவர், அழகமுத்து. எனக்கு கருப்பும் வேண்டும், சிவப்பும் வேண்டும் அதுவே தி.மு.க. கொடியாகும்” என்று இரண்டு முன்னோடிகளையும் இணைத்து, திருச்சி வளர்ச்சிக்கு அன்பும், அழகும் தேவை என்பதைக் குறிப்பிட்டிருக்கிறார். அந்த அழகமுத்து, 1987-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 5-ஆம் தேதி மறைந்தார்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம், சிறை தண்டனை என கழகத்தினர் தீவிரமாக இயங்கிய காலத்தில் அவரது மறைவு அமைந்தது. ‘திருச்சி, துறையூர் பகுதிகளில் கழகம் வளர்க்க அரும்பாடுபட்ட நண்பர், திராவிட இயக்கத்தின் வளர்ச்சிக்காக உழைத்த ஆலமரங்களில் ஒருவர்’ என தனது இரங்கல் கடிதத்தில், திருச்சி நினைவுகளை திரும்பிப் பார்த்தார் கலைஞர். அவரது சொற்கள், தொண்டர்களையும் திரும்பிப் பார்க்க வைத்தன. எத்தனை ஆண்டுகள் ஆனாலும், து.ப.அழகமுத்து கனவினை, நினைவுகளைத் திரும்பிப் பார்த்து, கழகத்தினர் வீறுநடை போடுவர்.

**...துடிக்கும்**

## வெம்பக்கோட்டை கல்மணி!



கீழடி அகழ்வாராய்ச்சி சங்ககால தமிழர் பண்பாட்டினை உலகுக்கு அறிவித்து, தமிழர்கள் 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நகர நாகரிகம் கொண்டவர்கள் என்கிற பெருமையை நிறுவியது. தொடர்ச்சியாக, விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை அகழ்வாய்வுப் பணிகளில் தற்போது, ‘கார்னீலியன்’ என்றழைக்கப்படும் சூதுபவளக் கல்மணியில் குழிவான முறையில் செதுக்கப்பட்ட திமிலுள்ள காளை வடிவம் கண்டறியப்பட்டுள்ளது. இது மோதிரத்தில் பதிப்பிக்கும் வகையில் உள்ளது.

“கடந்த இரண்டு கட்ட அகழாய்வில் 15 சூதுபவளக் கல்மணிகள் கிடைத்தன. செதுக்கு முறையில் ‘சீறும் திமிலுள்ள காளை உருவம்’ கிடைக்கப் பெற்றுள்ளது இதுவே முதல் முறையாகும்” என நிதி மற்றும் மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு பெருமையுடன் தனது முகநூலில் பதிவிட்டுள்ளார்.

இதுவரையில், சுடுமண்ணால் ஆன திமில் உள்ள காளைகள் கிடைத்த நிலையில், தற்போது சூதுபவளக் கல்லில் திமிலுள்ள காளை உருவம் பொறிக்கப்பட்டது கிடைத்திருக்கிறது. சூதுபவள மணிகள் செய்யக்கூடிய மூலக்கற்கள் மகாராட்டிரம் மற்றும் குஜராத் மாநிலங்களில் மட்டும் கிடைக்கின்றன. தவிர, கல்மணிகளில் உருவங்கள் குழிவான முறையில் உருவாக்கப்படும் தொழில்நுட்பம் ரோம் நாட்டில் சிறப்புற்றிருந்தது. இதற்கு முன்னர், கீழடி, முசிறி அகழாய்வுகளில் கிடைத்த சூதுபவளக் கல்மணிகள் சங்க காலத்தைச் சேர்ந்தவை என அறிவிக்கப்பட்ட நிலையில், அதேபோன்று வெம்பக்கோட்டையிலும் கிடைத்திருப்பது தமிழர்களின் நாகரிகப் பெருமைக்குச் சான்று.

## :ப்ளாஷ்பேக்



### சகோதரருக்கு மாநகரத் தந்தையின் வாழ்த்து!



அ.பன்னீர்செல்வம்

1997-ஆம் ஆண்டு ஏப்ரல் 27 அன்று என்னுடைய சகோதரர் சக்திவேல் அவர்களின் இணையேற்பு விழா திருவண்ணாமலையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்நிகழ்வில் பங்கேற்பதற்காக அப்போது சென்னை மாநகரத் தந்தையாக இருந்த, இளைஞர் அணிச் செயலாளர் இன்றைய முதலமைச்சர் அவர்களை அழைத்திருந்தேன். என் அழைப்பை ஏற்று, அவர்கள் வருகை புரிந்து மணமக்களை வாழ்த்தினார். உடன் அண்ணன் பொன்முடி, எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் ஆகியோர் பங்கேற்றனர். அப்போது நான் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளராகப் பொறுப்பு வகித்து உரையாற்றினேன்.

**– அ.பன்னீர்செல்வம்,**
**முன்னாள் ஒன்றியக் கழகச் செயலாளர்,**
**சங்கராபுரம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### கோதுமை சாப்பிடச் சொன்ன ஒன்றிய அரசு!

1957-ஆம் ஆண்டு டிசம்பர் 27 மற்றும் 28 தேதிகளில் நாஞ்சில் மாவட்டக் கழக மாநாடு நடைபெற்றது. மாநாட்டுத் தீர்மானங்களில் ஒன்றாக, தமிழ்நாட்டுக்கு அரிசி பெற்றுத் தரும் பொறுப்பினை ஒன்றிய அரசு ஏற்க வேண்டும் என வலியுறுத்தப் பட்டது. உணவு நெருக்கடியைச் சமாளிக்க, தென்னாட்டினர் கோதுமை உணவுப் பழக்கத்தைக் கடைபிடிக்க வேண்டுமென்று ஒன்றிய அரசு கூறியதற்கு, அந்தத் தீர்மானத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

579

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.